உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவ பரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 20

ஆரம்பம்: விரோதி ஞூ (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அசு] யாழ்ப்பாணம்:- ஆனந்த ஞூ புரட்டாதிமீ ச-உ வெள்ளிக்கிழமை (20-9-1974) [இல: உஉ

# நாவலர் தர்மம் பாதுகாக்கப்பட வேண்டும்

## சைவப் பெருமக்களின் கோரிக்கை

நாவலர் தர்ம பாதுகாப்புச் சபையின் பொதுக் கூட்டம், யாழ். ரஸிக ரஞ்சன சபா மண்டபத்தில் 18—9—74 புதன்கிழமை மாலை 5 மணியளவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:- நாவலர் தர்மங்கள் பாதுகாக்கப்படுவதற்கு ஓர் சபை இயங்குவது நல்லது என்றும், சபையினர் நாவலர் நெறிமுறைகளை அறிந்தவர்களாயும் தருமநெறி தவறாது நடப்பிப்பவர்களாயும் அமைதல் வேண்டும். நல்லூர் சைவப்பிரகாச மடாலயக் காணியில் இருந்த கடைகள் அகற்றப்பட்டமை ஒரு பெரும் வெற்றியாகுமெனவும், அதில மடாலய தர்மம் நடப்பதற்கு ஏற்ற வழிவகைகளைச் செய்வது நல்லது எனவும் குறிப்பிட்டார்கள்.

மேற்படி சபை உறுப்பினராகிய திரு. ச. பொன்னுஸ்வாமி யாழ்ப்பாணம், சிதம்பரம் நாவலர் தர்மங்களை விளக்கிக் காட்டியதுடன் இத் தருமங்கள் செவ்வனே நடைபெற்று வருவதற்கு இத்தர்ம பாதுகாப்புச்சபை துரிதமாகச் செயல்பட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினர்.

திரு. சி. சிவரத்தினம், நாவலர் நோக்கங்களைப் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றவேண்டியது மிக அவசியம். நாவலர் தர்ம வருவாயிலிருந்து அவர் இயற்றிய சைவ வினாவிடை, பாலபாடம், பெரியபுராணம், இலக்கணம் ஆகிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டு பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்வதுடன், நாவலர் சாசனங்கள் இலட்சியங்கள் பற்றிய விபரங்கள் நூல்வடிவில வெளியிடப்படவேண்டியதும் அவசியமாகும் எனக் குறிப்பிட்டார்.

திரு மு. வைத்திலிங்கம் பேசுகையில்: நாவலர் தர்மப் பாதுகாப்பு அவர் சீட பரம்பரையினருக்கே உரியதென்ற ஆதாரங்களை விளக்கிக் காட்டினர்.

திரு. த. சோமசுந்தரம் பேசுகையில்: சைவ சமய வளர்ச்சி குறைவடைவதற்குச் சைவ மக்களின் பராதீனமே காரணமாகும். அந்நியர் ஆட்சிக் காலத்தில் நமது சமயம் நலிவுற்ற நிலையிலும் பார்க்க இன்று பிறசமய போதனை என்ற போர்வையில் ஆபத்தான நிலை அதிகரித்து வருவதை விழிப்புடன் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினர்.

திரு, ந. சபாரத்தினம் பேசுகையில்: நல்லூர் சைவப்பிரகாச மடாலயமும், நாவலர் தர்மங்களும் செயற்படவேண்டியது அவசியமாகும் எனக் குறிப்பிட்டார்.

திரு, இ. செ. மன்மதராயன் பேசுகையில்: நாவலர் தர்ம பாதுகாப்புச் சபை துரிதமாகச் செயற்படவேண்டியதன் காரணங்களை விளக்கிப்பேசினர்.

நாவலர் தர்ம பாதுகாப்புச் சபையின் புதிய உறுப்பினராக திருவாளர்கள்: த. சோமசுந்தரம் (தலைவர்) மு. வைத்திலிங்கம் (காரியதரிசி) ச. பொன்னுஸ்வாமி, சி. சிவக்கொழுந்து, ந சபாரத்தினம் ஆகிய ஐவர் தெரிவு செய்யப்பெற்றனர்.

இச் சபையைப் பதிவுசெய்து ஆக்க பூர்வமான செயல்களில ஈடுபட வேண்டுமெனவும் தீர்மானிக்கப் பெற்றது.

இச்சபைக்கு உறுதுணையாக பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் உட்பட பதினொரு பேர் கொண்ட ஓர் ஆலோசனைச் சபையும் நியமிக்கப்பெற்றது.

——

## பாராட்டு விழா

சிவநெறிப் புரவலர் திரு, க, கனகராசா அவர்கள் சமாதான நீதவான் பட்டம் பெற்றமையைக் கௌரவிக்கும் முகமாக 22-9-74 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் சபைத்தலைவர் பண்டிதா அ ஆறுமுகம் அவர்கள் தலைமையில் ஒரு பாராட்டு விழா நிகழவிருக்கின்றது. முதலியார் செ. சின்னத்தம்பி, திரு. சோ. அருணாசலம், திரு. க. சிவசுப்பிரமணியம் B. Sc, திரு க. மயில்வாகனம், திரு. க. வாமதேவன், பண்டிதை பொ. பாக்கியம் ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள். திருப்பூங்குடி V V. K ஆறுமுகம் அவர்களால் "தால விலாசம்" என்னும் பொருள் பற்றி வில்லிசை நிகழ்ச்சியும் இடம்பெறும். திரு. க. கனகராசா அவர்களின் பதிலுரையுடன் விழா பூர்த்தியாகும்.

——

## பெருந் திருவிழா

சரித்திரப் பிரசித்தி பெற்ற உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவில் மகோற்சவம் 22-9-74 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகின்றது.

30 - 9 - 74 திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், 1-.0-74 செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் சிறப்பாக நடைபெறும். உற்சவ காலமான பத்துத் தினங்களிலும் உபந்நியாசங்கள், திருமுறை இசைக் கச்சேரிகள், சங்கீத கதாப்பிரசங்கங்கள், நாதஸ்வர இசை முதலியன இடம்பெறவுள்ளன

———

## சமஸ்கிருதமும் தமிழும்

### — திரு சு. சிவசுப்பிரமணியம் —

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆயுள் அங்கத்தவர்,
கொழும்பு விவேகானந்த சபை ஆயுள் அங்கத்தவர்.
ஸ்ரீ இராமக்கிருஷ்ண மிஷன் அதிகார சபை அங்கத்தவர்,
அகில இலங்கை இந்து காங்கிரஸ் ஸ்தாபகர்களுள் ஒருவர்,
திருக்கேதீஸ்வர புனருத்தாரண சபை ஸ்தாபகர்களுள் ஒருவர்
இந்து சமய ஆலோசனைச் சபை அங்கத்தவர்.
இலங்கை தமிழ்ச் சங்க ஆயுள் அங்கத்தவர்.

சமஸ்கிருதமும் தமிழும் சைவசமயத்தவர்கள் உட்பட இந்து சமயத்தை அநுட்டிக்கும் எல்லாத் தமிழர்களுக்கும் அவசியம்தேவை, இந்து சமயத்தையும் சைவ சமயத்தையும் அநுட்டியாத கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் அவை தேவையில்லாதிருக்கலாம். சமயம் கலாசார சம்பந்தமான அறிவு வளர்ச்சிக்கும் இந்து சமய அபிவிருத்திக்கும் அவை அவசியந் தேவை. உலகின் எப்பாகங்களிலுமுள்ள இந்துக்களுடைய ஒற்றுமைக்கும் அவை தேவை. பௌத்தர்களுக்கும் வடமொழி அறிவு நற் பயனளிக்கும்.

சமய அநுட்டானக் கிரியைகளிலும் சாதனைகளிலும் நம்பிக்கை பெருகவும் அதன் மூலம் ஆன்ம லாபம் பெறவும் சமஸ்கிருத அறிவு தமிழர்களுக்குப் பயனளிக்கும். தமிழ் மொழிப்பற்று வடமொழியில் துவேஷத்தையுண்டு பண்ணுதல்முறையல்ல. இரு மொழிப்பற்றும் ஒருங்கே நிலவலாம், ஒரு மொழி மற்ற மொழிக்கு

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

## கவிதையின்பம்

### [ ஷண்முக குமரேசன் ]

படிக்காத மக்களிடமும் கவிதை இடம்பெறுவதை நாம் பார்க்கிறோம். தாய்மாரின் தாலாட்டு, ஒப்பாரி முதலியவற்றில் இலக்கணம் அவ்வளவு இல்லாவிடினும் உணர்ச்சி ததும்பும் - ஓசை நயமுள்ள கவிதை வளத்தைக் காண்கிறோம். பழந்தமிழ் மக்கள் கவிதையோடு வாழ்ந்தார்கள். உலக்கை போடும்பொழுது பாடும் பாட்டு வள்ளைப்பாட்டு; நீர் இறைக்கும்பொழுது பாடும் பாட்டு ஏற்றப் பாட்டு. இவ்வாறுக மக்கள் பாட்டுப்பாடித் தம் வேலையின் வேதனையை மறந்தனர். இலக்கணம் இருந்தால் மட்டும் கவிதையமைந்து விடாது.

பல ஆண்டுகளுக்கு முன் எமது நாட்டிற் "பிள்ளைப் பாட்டு" என்னும் நூல் சிறுவர்களுக்காகத் தொகுக்கப்பட்டது. சிறுவர்கள் பாடி மகிழக்கூடிய ஓசை நயமுள்ள பலபாடல்கள் அதிலுள்ளன. அகிலேச சர்மா "கள்ளுக் குடியாதே" என்ற பொருளிற் சுவையான பாட்டு அதிற் பாடியுள்ளார். குடிகாரக் குயவனொருவன் கள்ளுக் குடித்துவிட்டு மனைவியை அடிக்கத் தொடங்கினன். அவளும் பானை மறைவிலோடி மறைந்திருந்தாள். குடிகாரக் குயவன் மனைவி என்றெண்ணிப் பானைகளை அடித்ததைக் கவிஞர் பின்வருமாறு பாடியுள்ளார்:

பானைகளை மனைவியென
அவனும் எண்ணிப்
பலமாகப் பானைகள்மேல்
ஓங்கி அடித்தான்
தான்வைத்த பானை எல்லாம்
கள்ளுவெறியால்
தவிடுபொடி யாக்கியபின்
துயரமுற்றான்.

உணர்ச்சி, கற்பனை, ஓசை முதலியன கவிதைக்கு இன்றியமையாதன. நகைச் சுவை, அவலச்சுவை முதலிய சுவைகள் கற்போர்க்குக் களிப்பூட்டுவன. கண்ணன் குழலூதிக் கானமழை பொழியும்போது ஆயர்குலப் பெண்கள் அசைவற்றுக் கண் மூடி வாய் திறந்து கேட்டிருப்பதைப் பாடிய பாரதியார்,

"அங்காந்திருக்கும்
வாய்தனிலே கண்ணன்,
ஆறேழு கட்டெறும்பைப்
போட்டுவிடுவான்
எங்காகிலும் பார்த்த
துண்டோ கண்ணன்
எங்களைச் செய்கின்ற
வேடிக்கை ஒன்றோ"

என அழகாக நகைச்சுவை ததும்பக் கூறினர்.

எள்ளிருக்கவே இடமின்றிஉடல்முழுதும் இராமபிரானின் அம்புகளாலே துளைக்கப்பட்ட இராவணன் சீதையை 'இதயமாஞ் சிறையில்' வைத்த காரணத்தால் இராமபிரானின் அம்பு இராவணனின் இதயத்தைத் தேடி உடல்புகுந்து தடவியதாக மண்டோதரி புலம்புகின்றாள். இக் காட்சியைக் கம்பர்,

"கள்ளிருக்கு மலர்க்கூந்தற்
சானகியை
மனச்சிறையிற் கரந்த
காதல்
உள்ளிருக்கு மெனக்கருதி
உடல்புகுந்து
தடவியதோ ஒருவன்
வாளி'

என மண்டோதரி வாயிலாகப் பாடியதிற் கற்பனைத் திறனையும் அவலச் சுவையையும் காண்கின்றோம்.

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

## பரிசுத்தினம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியினது பரிசளிப்பு விழா 25 - 9 - 74 புதன்கிழமை நிகழும். உயர்நீதி மன்ற நீதியரசர் கௌரவ. சு. சர்வானந்தா அவர்கள் பிரதம விருந்தினராக கடமையாற்றுவார், திருமதி சர்வானந்தா அவர்கள் பரிசுகளை வழங்குவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிற் பனைமகோற்சவம்

## பனம் விதைகள் நாட்டி பயன் பெருக்கிட வாரீர்

மகாத்மா காந்தியடிகள் பிறந்த தினமாகிய ஒக்ரோபர் 2-ஆம் திகதியை பனை மகோற்சவ தினமாக அகில இலங்கைக் காந்தி சேவாசங்கம் தொடர்ந்து கொண்டாடிவருகிறது. இவ்வருடம் பனை மகோற்சவத்தை மிகவும் விரிவுபடுத்தி அதி தீவிரமாகச் சாதனை ரீதியாக செப்ரெம்பர் 1-ம் திகதி தொடக்கம் ஒக்ரோபர் 2-ம் திகதி வரையும் கொண்டாட வேண்டும். இதன் மூலம் மக்களிடையே சுதேசி இயக்கம் விருத்தியடையவும் பொருளாதாரப் புரட்சியும் சிந்தனைகளும் வளர்ச்சியடையவும் உதவும். ஒவ்வொருவரும் குறைந்தது 10 பனம் விதைகளாவது வேலி எல்லைகளிலும் வெற்றிடங்களிலும் நாட்டுவதுடன் 'பனை உணவு' வகைகளை அன்பர்களுடன் சேர்ந்து உண்ண வேண்டும். பனை உணவின் மகத்துவத்தைப்பற்றிப் பிரசாரம் செய்ய வேண்டும்.



தமிழ் மக்களின் பொருளாதார வாழ்வின் அடித்தளம் பனை மரமே! பனையின்றி வாழ்வில்லை! ஏழைகளின் கதி பனையே! பனையுள்ள நாட்டில் பஞ்சமில்லை. ஏழைகளுக்குக் கூழும் குடிலும் குறையாது வழங்கி இரட்சித்து வரும் கற்பகதரு பனையன்றோ?

எங்கள் நாட்டின் ஏழ்மையைப் போக்கிப் பொருளாதார விருத்தி செய்வதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கும் 'பனை வெல்லம்' 'பனம் சீனி' முதலியவையும் நீரா போன்ற பானங்களையும் உற்பத்தி செய்வதும் ஆகிய கிராமக் கைத்தொழில்களை விருத்தி செய்ய வேண்டிய அவசியத்தைப் பகிரங்கப்படுத்திப் பிரசாரஞ் செய்ய வேண்டும்.

பனை தேசிய வருமானத்துக்குரிய ஒரு விருட்சம் என்பதை எடுத்துக் காட்டுவதற்குப் பனை மரத்தின் படம் பொருந்திய ஒரு முத்திரையும் ஒருபணத்தாளும் (நோட்டும்) அரசாங்கத்தால் வெளியிடப்படவேண்டும் என்பதை வற்புறுத்திப் பிரசாரம் செய்ய வேண்டும்.

பாடசாலைகளிலும், சங்கங்கள் சபைகளிலும் கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டிகளை ஏற்படுத்தி மாணவர்களையும் ஏனைய மக்களையும் இதில் ஈடுபடச் செய்ய வேணடும்.

மக்களிடையே ஏற்றம் தாழ்வு, துவேஷம். போட்டி பொறாமை, சுரண்டல் என்பவையற்ற சர்வோதய சமுதாயத்தை அமைப்பதற்காகக் காந்தியடிகள் வகுத்த ஆக்க வேலைத் திட்டங்களில் நம்பிக்கை கொண்டு கிராமியப் பஞ்சாயத்துச் சீவிய முறைகள் மீண்டும் வளர்ச்சி பெற்றுச் சாசுவதமான சமாதான நிலை ஏற்படுவதற்காக தேசியக் கருத்துக்களுக்குப் புத்துயிரளிக்க வேண்டும்.

செப்ரெம்பர் 11-ஆம் திகதி ஆசார்ய விநோபாஜியினுடைய பிறந்த தின விழாவையும் பாரதி தினத்தையும், ஒக்ரோபர் 2 ஆம் திகதி மகாத்மா காந்தியடிகளுடைய பிறந்த தினமாகிய 105 ஆவது சர்க்கா ஜயந்தி விழாவையும் கொண்டாடி மகான்களின் போதனைகளையும் வாழ்க்கை முறைகளையும் நினைவு கூரல் வேண்டும், நூல்நூற்தல் சமூசப் பிரார்த்தனை, சமூக விருந்து முதலிய வைபவங்களை ஏற்படுத்திக் காந்தீய சர்வோதயக் கருத்துக்களைப்பற்றிக் கலந்துரையாடல் வேண்டும்,

இந்தப் பனை மகோற்சவ மாதத்தில் ஏதாவது ஒரு தினத்திலாவது கல்வி நிலையங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள், விவசாயக் கழகங்கள் ஏனைய பொதுஸ்தாபனங்கள் யாவும் கொண்டாட்டத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அகில இலங்கையிலும் பன விதைகளை நாட்டிப் பனம் - சுதேசி பொருள்களைக் உபயோகித்து கிராமங்கள் தோறும் ஊர்வலங்கள், பொதுக்கூட்டம் நடாத்திப் பனை மகோற்சவத்தைக் கொண்டாடுங்கள். பனைகளைப் போற்றி வளர்த்து உபயோகிப்பது சர்வோதயம் அல்லது அனைவரின் மேம்பாடு. இயற்கை அளித்த செல்வம் பனை, பனை வெல்லம் சத்துள்ளது. ஆரோக்கியம் நிறைந்தது பனை உணவுகளையே உண்ணுங்கள். பனைகளை நிறையப் பயிரிடுக.

('காந்தீயம்' யூன் — யூலை 74)

## தீர்த்தக் கேணியும் திருமஞ்சனக் கிணறும்

### பரிபாலன சபையின் அடுத்த முயற்சி

"ஆலயங்களைச் செவ்வனே பரிபாலனஞ் செய்து அடியார்கள் சமயவாழ்வு வாழ்வார்களாயின் நாட்டில் எக்கஷ்டமும் மறைந்து சுபீட்ச வாழ்வு சோபித்து மலரும்" இவ்வாறு புளியம்பொக்கனை நாகேசுவரர் சிவன்கோவில் ஆலய பரிபாலன சபையின் நிர்வாக சபைக் கூட்டம் கோயில் மடத்தில் அச் சபைத் தலைவர் திரு. இ. த. சுப்பிரமணியம் தலைமையில் கூடிய சமயம் கிளிநொச்சித் தொகுதி பா; உ: திரு. ராசிங்கம் ஆனந்தசங்கரி கூறினார்.

கோவிலுக்கு திருமஞ்சனக் கிணறும், தீர்த்தக் கேணியும் அவசியமாக வேண்டப்படும் திருப்பணிகளாகும் என முடிவு செய்யப்பட்டது. இதற்கான வேலைகள் துரிதமாக நடைபெறுகின்றன. இச் சிவத் தலத்தில் கடந்த ஆண்டு பெரும் பொருட் செலவில் மணிக்கோபுரம்கட்டி மணியும் ஏற்றப் பட்டது குறிப்பிடத்தக்கது.

—

## கதிர்மாலைகள் சூட்டினர்

### சிவநெறிப் புரவலர்க்கு இணுவிலில் பாராட்டு

யாழ்ப்பாணம் மில்க் வைற் தொழிலக உரிமையாளர் திரு. க. கனகராசா சமாதான நீதவான் பட்டம் பெற்றதைப் பாராட்டுவதற்கு இணுவில் தாவடியூர் பொதுமக்கள் பெருந்தொகையாகக் கூடியிருந்தனர். இரண்டு மைல் தூரத்திற்கு சிறந்த மேளவாத்தியம், காவடியாட்டம், ஆனையின் பவனி, ஆகிய சிறப்புக்களோடு ஊர்வலம் நடைபெற்றது. வீடுகள் தோறும் மக்கள் பூரண கும்பம் வைத்து மாலைகள் அணிவித்துக் கௌரவித்தனர். சிலர் வேப்பம் பழம், வெங்காயம், மிளகாய், குரக்கன் கதிர், பனங்கட்டி முதலியவற்றால் மாலைகள் கட்டி அணிவித்தார்கள்.

இணுவையம்பதி பரராசசேகரப் பிள்ளையார் கோவில் முன்றலில் 13-9-74 வெள்ளிக்கிழமைநடைபெற்றவிழாவிற்கு தவத்திரு. வடிவேற் சுவாமிகள் தலைமை தாங்கினாகள்.

சிவத்தமிழ்ச் செல்வி. பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள், செல்வன்

வளர்ச்சி 3-ம் பக்கம்

## சமஸ்கிருதமும்-

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

மாறானதல்ல. இருமொழிகளுக்கும் சமமதிப்பை அளிப்பது பரம்பரையாக நமது நாட்டில் நிலவி வந்த மரபுமாகும். தமிழர்களாகவுள்ளவர்கள் இந்துக்களும் சைவர்களும் பாஷை இனம் சம்பந்தமாக கிறீஸ்தவர்களுடனும் மூஸ்லிம்களுடனும் ஒற்றுமையாக வாழ்க்கையை நடத்தலாம். சமயத்துக்கும் கலாசாரத்துக்கும் உதவு இன்ற வடமொழி அதற்குத் தடையாக அமையாது.

### நாவலரும் வடமொழிப் பற்றும்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான எங்கள் சைவ சமய அநுட்டானதத்துக்குக் காட்டிய வழியைப் பின்பற்றுகின்றோமல்லவா? அவர் இருமொழிக்கும் சமமான மதிப்பை வழங்கிவந்தாரென்பதை விளக்குவதற்குப்போாதனைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் கலாநிதி ச. தனஞ்செயராஜசிங்கம் அவர்கள் எழுதிய 'நாவலர் பணி' என்னும் நூலிலிருந்து பின்வரும் பாகத்தை அநுவதித்து உதவுகின்றோம், நாவலர்பெருமான் தமது வித்தியாசாலைக்கு நிதியுதவி கோரி தேசாதிபதி அன்டேர்ஸன் அவர்களுக்கு எழுதிய மனுப்பத்திரத்தில் அப் பாகம் காணப்படுகின்றது.

"மாணவர்களுடைய பெற்றோரும் பொது நலப் பற்றுள்ளவர்களும மாணவர்களுக்கு தமிழ் மொழி வளர்சசிக்கு உறு துணையாகவுள்ள வட மொழிப் பயிற்சியையும விரும்புகின்றார்கள்".

வடமொழி தமிழ் மொழியிலிருந்து தோன்றியதென்ற கருத்தை யுடையவர்களும் எங்களுக்குள் இருக்கின்றார்கள் என்பதையும் நாம் அறிவோம், அது எவ்வாறிருப்பினும் இரு மொழிகளுக்கும் நெருங்கிய தொடர்புணடென்பதை நாம் மறுக்கமுடியாது.

ஆனால் நமது மக்களுடைய சமயம் கலாசாரம் சம்பந்தமான அபிவிருத்திக்கு இருமொழிப் புலமையும் அத்தியாவசியமாகும்.

ஆகவே வடமொழிக்கும் தமிழுக்குமிடையே பூசலை உண்டாக்குவது நமது மக்களுடைய சமய வாழ்க்கையை அழிக்க நேரிடும். நமது மக்களுடைய சமயவாழ்க்கையின் அபிவிருத்திக்கு இருமொழிகளும் ஒன்றுக்கொன்று தேவைப்படும்.

ஸ்ரீ லங்காவில் வாழும் இந்துக்களினதும், சைவர்களினதும் நன்மைக்கும் ஆத்மிக வாழ்க்கைக்கும் இருமொழிகளையும் பேணிக்காத்தல் அவசியமாகும்.

### இரு மொழிகளுக்குமிடையிலான உறவை வளர்க்க வேண்டாமா ?

நாவலர்பெருமான் இவ்வுண்மையை உணர்ந்து தாம் வகுத்த கல்வி முறையைப் பிரபல்லியமாக்குவதற்காக பாடுபட்டார். தமிழ் மொழி அறிவு அபிவிருத்திக்காக தாம் தமிழ்மொழியில் பாண்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்)

நேயர் நெஞ்சம்

### யாழ்ப்பாணத்திற் சிவாலயம்

ஐயா,

சமய குரவர், சந்தான குரவர், நாவலர் மரபு வழிச் சைவர்க்குச் சிவன் கோவில் வழிபாடு மிக முக்கியம். அதற்கேற்ற வகையில் யாழ்ப்பாணத்திலுள்ள சிவன் கோவில்களைப் பயன்படுத்தச் சைவப் பெருமக்கள் முன்வருதல் வேண்டும் என சைவப் பாதுகாப்புச் சேவை விநயமாக வேண்டுகின்றது.

இங்ஙனம்
சைவ சித்தாந்த
அடியவன்
க. கணபதிப்பிள்ளை
கௌரவ இயக்குநர்
சைவ பாதுகாப்பு இயக்கம்
55/44, கஸ்தூரி வீதி,
யாழ்ப்பாணம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டில்

வழ, இல. M B 13652

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி
கபேரியல் இம்மனுவல்
— வழக்காளி

எதிராக

யாழ்ப்பாணம், நவாலி
1. வஸ்தியாம்பிள்ளை அருளானந்தம்
2. ருப்பியல் பேதுரு
எதிராளிகள்

M B 13652ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம், 1974-ம் ஸ்ரீ ஒக்ரோபர் (ஐப்பசி) மாதம் 24-ம் திகதி (24-10-74) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 2446 - 25 சதம் மேலும் இதில் 1,500/- ரூபாவுக்கு 10-02-73 தொடக்கம் 22-11-73 வரைக்கும் வருடமொன்றுக்கு 18 வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 465 - 70 சதம் பவுண்டேச் மற்றும் விற்பனவுக்குரிய சலார்களும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை வடக்கில் நீண்டகால ஆட்சியிலுள்ள நிலப்பரப்பு $1\frac{1}{4}$ கல் வீடும் கிணறும் வான்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும்:- ஒழுங்கை, மேற்கு:- சின்னத்தம்பி யோர்ச்சினதும், மோசஸ் அந்தோனியினதும் ஆதனங்கள், தெற்கு:- பூகோனப்பர் மனைவி திரேசம்மாவினுதனம், அதைச் சேர்ந்தவைகளுடன் முழுவதும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
விற்பனை ஆணையாளர்
"இராசகிரி"
643, காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம் 204-74
22-8-74

## அடைவு நகை ஏல விற்பனவு

அரசாங்க உத்தரவுடன் காரைநகர் வட்க்கு இலகடியில் அடைவு பிடிக்கும வே. சுப்பிரமணியம் அவர்களின் அடைவு கடையில் 1972-ம் ஸ்ரீ புரட்டாதி மீ 15-ஆம் திகதி தொடக்கம் 1973 ஆம் ஸ்ரீ பங்குனி மீ 29 ம் திகதி வரை அடைவு வைக்கபபட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் எனனால் 1974 ம் ஸ்ரீ கார்த்திகை மீ 4 ம் திகதி திங்கட் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் ஷெ அடைவு கடையிலிருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

காரைநகர்,
16-9-74.

வை. ஏரம்பமூர்த்தி
ஏல விற்பனையாளர்.
Auctioneer

203 20, 27,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1. சிதம்பரப்பிள்ளை வேலுப்பிள்ளையும்
2. பெண் அன்னபூரணம், கச்சேரி, நல்லூர் ரேட், யாழ்ப்பாணம். —வழக்காளிகள்

இல: M B 12100 எதிராக

1. செல்லையா பொன்னுத்துரையும்
2. பெண் ராசம்மா இருவரும் பாரதி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.
3. சின்னத்தம்பி வீரசிங்கம் பெண் சேதுலட்சுமி மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12100ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1974-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21-ம் நகதி (21-10-74) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- ரூபா 3728/-ம், பின் 10-11-72 தொடக்கம் 10-5-73 வரை ரூபா 2500/-க்கு 10 வீத வட்டியும் பின் முழுத்தொகையும் இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 530 ரூபா 30 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை 'நீத்தன் தோட்டம்' நி. பர. (2) இரண்டு இதில் தெற்குப்பக்கமாக நி. பர (1) ஒன்றும், வடகிழக்குக் காணியில் இருக்கின்ற கிணற்றில் அதற்குரிய பங்கும் பாதை வழிவாய்க்கால் உரித்தும். வான்பயிர் செய்பயிர்களும். இதற்கு எல்லை கிழக்கு:- பரஞ்சோதி பெண் கமலாம்பிகைக்குரிய ஆதனம், வடக்கு:- எதிரிகளுக்குரிய மிகுதி ஆதனம், மேற்கு:- ஒழுங்கையும், முத்தையா மயில்வாகனத்துக்குரிய ஆதனமும், தெற்கு:- C. S அருளம்பலத்துக்குரிய ஆதனம், இதடங்கலும்.

"விதானை வளவு" சி. செ. மாரிமுத்து
சித்தன்கேணி, 9-9-74 கொம்பிசனரும் விலைமதிப்பாளரும்
199-74

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கைதடி (1) சங்கரப்பிள்ளை இராசையா
(2) பெண் பராசக்தி —வழக்காளிகள்

இல: 4354 எதிராக

கோயிலாக்கண்டி (1) வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்
(2) பெண் மனோரஞ்சிதம் —எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டின் 4354-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1974-ம் ஆண்டு அக்டோபர் (ஐப்பசி)மீ 14-ம்உ (14-10-74) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 5490-62 சதமும் இதில் ரூபாய் 3500/-க்கு 11-12-72 திகதி தொடக்கம் 29-6-73 திகதி வரைக்கும் 100க்கு 9 வீத வட்டியும் பின்திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 295-10 சதம் இதில் ரூபாய் 150 கோட்டுச் செலவில் இறுபட்டது.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி நாவற்குளிக் கோவிற்பற்று கோயிலாக்கண்டி இறை "வெல்லார் அடைப்பும் ஒட்டுப்பள்ளமும்" நிலப்பரப்பு 2½ம் மேற்படி "வெல்லார் அடைப்பும் ஒட்டுப்பள்ளமும் நிலப்பரப்பு 2½யும் ஒருங்கு சேர்ந்து நிலப்பரப்பு (5) ஆனால் ஆட்சிப்படி நிலப்பரப்பு (8) எட்டும் பயிர்களும், எல்லை கிழக்கும் வடக்கும்:- றோட்டு, மேற்கு:- விக்ரர் சத்தியநாதனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு:- றோட்டு, மறுபேருக்குமுரிய ஆதனமும், இதடங்கலும்.

2. மேற்படி கோயிலாக்கண்டி இறை "புளியடி வயல்" நிலப்பரப்பு (6) ஆறும், எல்லை கிழக்கு:- சின்னையா செட்டியார் சிவசண்முகநாதனின் ஆதனம், மேற்கு:- அருளானந்தம் பெண் அதிசயத்தின் ஆதனம். தெற்கு:- வீதி, வடக்கு:- வி. எஸ். எஸ். சத்தியநாதனுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
தெல்லிப்பளை கொமிஷனர் & விலைமதிப்பாளர்
2-9-74 198-74

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழ: இல. M. B. 12097

அராலி தெற்கு, அராலியில் இருக்கும்
(1) மருதப்புவின் கைம்பெண் வள்ளியம்மையும்
(2) வேலாயுதர் மாரிமுத்துவும் —வழக்காளிகள்

எதிராக

அராலி தெற்கு, அராலியில் இருக்கும்
(1) சுந்தரம்பிள்ளை கந்தசாமியும் அவரின் மனைவி
(2) தங்கம்மாவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 12097-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974ம் ஆண்டு ஐப்பசி மாதம் 23-ம் திகதி (23-10-74) புதன்கிழமை முற்பகல் 10-30மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:- முதலும் வட்டியும் ரூபா 1167-50 சதம் 18-10-70 தொடக்கம் 28-5-71 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 320 - 35ம் இதில் ரூபா 270/- கழித்து.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப் பிரிவு வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று அராலி தெற்கில் இருக்கும் "இன்தனை" என அழைக்கப்படும் வயற்காணி 15 பரப்பு: இதன் கிழக்கு எல்லையில்:- முத்தன் கந்தனது ஆதனமும். வடக்கு எல்லையில்:- முத்தன் கந்தனதும் பங்காளரினது ஆதனமும், மேற்கு எல்லையில்:- சதாசிவத்தின் கைம்பெண் வள்ளியம்மையின் ஆதனமும், தெற்கு எல்லையில்:- முடிக்குரிய காணியும் இந்தெல்லைப்படி இதனடங்கலும்.

'வடிவேல் உதயம்'' சி. ஆ. த. வடிவேலு, J. P.
காங்கேசன்துறைவீதி, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
கோண்டாவில், ஏல விற்பனையாளரும்
10-9-74 200-74

---

## சமஸ்கிருதமும் - தமிழும்

2 ஆம் பக்கத்து வளர்ச்சி

டித்தியம் பெற்றது போல வடமொழியிலும் பாண்டித்தியம் பெற்றாரென்பதை நாம் கவனித்தல் வேண்டும்,

வடமொழியை வெறுத்து திராவிட மொழிகளில் மாத்திரம் பயிற்சி பெறுவதற்காக இந்து சமயத்தவர்கள் சிலர் வடமொழியை புறக்கணிக்கின்றனர். அது தற்கொலைக்குச் சமானமாகும். கிறீஸ்தவர்கள், முஸ்லீம்கள் ஆகியவர்களுடைய நிலை வேறு. அவர்கள் வடமொழியை பொறுத்த மட்டில் அவர்கள் கொண்டுள்ள கருத்து எதுவாகவும் இருக்கலாம். அக்கருத்து இந்துக்களுக்கு உகந்ததல்ல.

வடமொழி அறிவைப் பற்றி நமது நாட்டில் பிழையான அபிப்பிராயம் நிலவுவதால் தான் இக்கருத்துக்களை வெளியிடத் துணிந்துள்ளேன்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதி 50, முதலாம் ஒழுங்கை, சின்னத்தம்பி கார்த்திகேசு —வழக்காளி

இல. MB 10644 எதிராக

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு, பருத்தித்துறை வீதி, (1) வேலு சிவசுப்பிரமணியமும்
(2) பெண் செல்வமணி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10644-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974-ம் ஆண்டு அக்டோபர் மீ 29-ம் திகதி (29-10-74) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்:

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 4155-00ம் 28-2-69 தொடக்கம் 18-11-69வரைக்கும் ரூபாய் 3000-00க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 305 - 40 சதம் இதில் ரூபாய் 1000-00 கொடுபட்டுள்ளது;

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென் கிழக்கிறை ஆரியகுளம் வயல் பர: நி. இலா. 2 குளி 17 இதில் தெற்காலை பிரிவிடப்பட்ட பர. நில: இலா. 1 குளி 0 வீடு, வடக்குப் பக்கத்திலிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலுருத்தும் மேற்குப் பக்கத்திலிருக்கும் மூன்றுமுள அகல ஒழுங்கையால் வடக்குப் பக்கத்துக்கு செல்வதற்கு பாவிப்புருத்தும் இதற்கெல்லை கிழக்கு:- பிலிப்பு முருகுவினதனம், வடக்கு:- மிகுதிக் காணியும், புது ஒழுங்கை முகப்பும், மேற்கு; ராமு செல்லரினதனம், தெற்கு:- குளம்

பதிவிலக்கம் D 233/300

புதிய இல: 113 டேவிற்றேட், அ. போ. எதிர்மன்னசிங்கி
யாழ்ப்பாணம். 18-9-74 கொமிஷனர் & விலைமதிப்பாளர்
202 20-9-74

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதி மன்றத்தில்

வழ. இல. M. B. 12578

உடுவிலைச் சேர்ந்த சின்னட்டி சின்னத்தம்பி —வாதி

எதிராக

தற்பொழுது கச்சேரியடி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும்
(1) இராசையா துரைராசாவும்
(2) பெண் புவனேஸ்வரியும் —பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் M B 12578ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1974-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 22-ந் திகதி (22-10-74) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்;

தீர்வைத்தொகை:- முதலும் வட்டியும் ரூபா 1983-90 20-6-72 தொடக்கம் 19-1-73 வரைக்கும் 1000/- ரூபாவிற்கு வருடம் 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 443-29 சதமுமாகும். இதில் ரூபா 300/- கழித்து.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வட பகுதி, உடுவில் கோவிற்பற்று உடுவிலில் இருக்கும் "குஞ்சிமுதலிக் குடியிருப்பு' என அழைக்கப்படும் நிலப்பரப்பு 5½ வான்பயிர் செய்பயிர்களுடன் மேற்கே இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்காலும் உடையது: இக்காணியின் எல்லை கிழக்கில்:- ஒழுங்கையும், கைஒழுங்கையும், எல்லை வடக்கில்:- வேலு ஆறுமுகத்தினதும் பங்காளரினது ஆதனமும், எல்லை மேற்கில்:- சின்னத்தம்பி கைம்பெண் நாகரத்தினத்தின் ஆதனமும், ஒழுங்கையும், எல்லை தெற்கில்:- மேற்குறித்த நாகரத்தினத்தின் ஆதனமும், இதனடங்கிலும் சொரியலாக நிலப்பரப்பு 4½யும் சேர்ந்தவைகளும்.

இல: H. 453/195

"வடிவேல் உதயம்" சி. ஆ. த. வடிவேலு J. P.
காங்கேசன்துறை வீதி, கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
கோண்டாவில் ஏலவிற்பனையாளரும்
10-9-74, 201, 20-8

---

## வருங் காலத்தைச் சிந்திப்போமா?



பத்தர்: "பனை மகோற்சவத்தை இம்முறை மிகப் பரந்த அடிப்படையிற்கொண்டாடும் படி நம்ம காந்திசேவாசங்கம் கேட்டிருக்குது அம்மான்!"

சித்தர்: "நல்ல கோரிக்கை; நாலு பேர் போற்றக்கூடிய கோரிக்கை; நமது வருங்காலச் செல்வங்கள் தலை நிமிர்ந்து வாழச்செய்கிற மேலான கோரிக்கை. 'கற்பகதரு'விதைகளை நாட்டவும் -பனம்பொருட்களைவிருத்தியாக்கவும் யாவரும் முன்வரவேண்டும். பனையின் பயன் ஒன்றா? இரண்டா? தங்கத் தாத்தா. நவாலியூர் சோம சுந்தரப் புலவர் ஐயா மிகஉருக்கமாகப் பிள்ளைகட்குக் கும்மி பாடி வைத்திருக்கிறார்; இப்பாடல் நிகழ்ச்சிகளை வானொலியிற் பரப்ப வேணும்:-

சீரா யொருபானை சோற்றுக்
கொரு சோறு
செம்பதம் பார்ப்பது
போற் பனையி
லோரா யிரம்பய னுண்டா
மவற்றினு
ளொன்றிரண்டு சொல்வேன்
ஞானப் பெண்ணே!

அந்தப் பனைதரும் நல்ல
பழத்தினை
யாராய்ந் தெடுத்துத்
தழலிட்டே
வெந்த பதத்தினில் நீரில்
கழுவியே
மேற் றோலை நீக்குவர்
ஞானப் பெண்ணே!

கையாற் பிசைந்து
கறந்து கறந்து
களியினை வாய் வைத்
துறுஞ்சி யுண்டாற்
செய்தேன் திரட்சிப்பால்
சீனி முதலிய
தித்திப்பென் றுண்ணுரே
ஞானப் பெண்ணே!

இளைய பாளை தட்டி
முட்டி கட்டிச் சுண்ணம்
ஏற்றி யெடுக்கின்ற
வின்ப நன்னீர்
தழையும் பனங்கட்டி
சீனிகற் கண்டுகள்
சமைக்க வுதவுமே
ஞானப் பெண்ணே!

இப்படியெல்லாம் பாடி யுளம் மகிழ்ந்தபுலவர் ஐயா அவர்கள் எமது இன்றைய நிலையைக் கண்டால் எப்படிப்பாடுவார்?

("நாயன்மார் – நாதன்")

---

## கதிர்மாலைகள் சூட்டி

2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

அ. மகேந்திரன், பண்டிதர் இராசையா, இணுவில் அம்பிகைபாகரின் வழி வந்த பெரியார் கதிர்காமநாதன், பண்டிதர் சபா. ஆனந்தர் முதலானோர் சமாதானநீதவானின் சைவப்பணி, தமிழ்ப்பணி, நாட்டுப்பணி, விவசாயப்பணி ஆகியவற்றை பாராட்டிப் பேசினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்க தண்புனல்
வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஆனந்த ஸ்ரீ புரட்டாதி மீ ௪-௨ வெள்ளிக்கிழமை [1974

# வளாகம் வளர வழிபாடு செய்வோம்

புரட்டாதித் திங்கள் இருபதாவது நாள் இலங்கைப் பல்கலைக் கழக வளாகம் யாழ் நகரிற் சமய நெறி முறையிலே முதல் அமைச்சராலே திறந்து வைக்கப் பட்ட இருக்கும வைபவம் பொது மக்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டும் நிகழ்ச்சியாகும். வள்ளல போன். இராமநாதன் அவர்கள் நிறுவிய பரமேசுவர க்கல்லூரியே வளாகமாக அமைதல் கல்வி உலகிற்கோர் நல்லெழிலாகும். என்னை? முளையிட்டு வளர்த்த மூதறிஞர் இராமநாத வள்ளல் முக்காலும் கல்வித் தெய்வத்தை முழுமனதாக வணங்கிப் பல்கலை பண்பு யாழ் நாடுபெற உழைத்தனர், ஆகையால் என்க

வருவதை வரவேற்று வளர்ச்சிக்கு வழிதேடுவதே மக்கட் பணபு. அறிவுச் செறிவின் அறநெறி. நாமெல்லோரும் நல்லவண்ணம் வாழ இராமநாத வள்ளல் நாளிலும் பொழுதிலும் நற்பணி புரிந்துழைத்து வந்தார் என்ற ஒன்றுக்கே நாட்டு மக்கள் நன்றி செலுத்த வேண்டியவர்கள் ஆவார். உய்வுக்குரிய ஒருவழி செய்நன்றி மறவாமை என்ற பொய்யா மொழி பொய்யாது மெய்யாய் விளங்கும் என்பதை யாழ் நாட்டில் வாழ்வாரும் உரியவர்களும் செய்கையிற் காட்டுவதற்கோர் அருந்தருணம் வளாகத திறப்புநாள்.

மங்கல வைபவ வேளையில் மக்கள் பரமேசுவரப் பெருமானை மலர்கொண்டு வணங்கித் திருமுறை ஓதி இப்பெரும் கைங்கரியம நின்று நிலவவும் என்றும வளரவும் கல்விக் குன்றின்மேலிட்ட நந்தா விளக்காய ஒளி பெருக்கவும் விதம் பூணுதல்வேண்டும். வள்ளல் தந்த வரப்பிரசாதம் இவ் வளாகம, சைவமும தமிழும் இரண்டறக் கலந்த சால்புக் குரியவர்களாகிய நாம வையகம் வாழ்த்த வாழ்வோமாக.

# கவிதையின்பம்

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

இராமாயணத்திலும் பாரதத்திலும் சந்தக்கவிகள் உண்டு. உரிய சந்தத்தோடு பாட்டைப் பாடும்பொழுது உணர்ச்சி மனத்திற் பொங்கியெழும்.

பாட்டில் அடிக்கடி உவமை வருவதுண்டு. 'சந்திரனைப் போன்ற முகம்' என்னும் உவமையைப் பலரும் அறிந்திருப்பர். பெண்களுக்கு அணிகலன்களை மாட்டி அழகுசெய்வர். அவ் வண்ணம் உவமை முதலிய அணிகளைக் கையாண்டு கவிஞர்கள் கவிதைக்கு அழகூட்டுவார்கள். பள்ளிக்கூடத்திலிருந்து வீடு திரும்பிய தன் பிள்ளைகளை மகிழ்ச்சியுடன் வரவேற்ற தாயைப் புது வெள்ளத்தை வரவேற்கும் உழவர்களுக்கு ஒப்பிடுகிறுர் பாரதிதாசன்;

''வழிந்தோடும்
புதுவெள் ளத்தை
வரவேற்கும் உழவ
ரைப்போல்
எழுந்தோடி மக்கள் தம்மை
ஏந்தினுள் இரு கை
யாலும்''

கண்ணகிக்குக் கோவலன் துன்பம் உண்டாக்கிய போதிலும் அவள் கோவலனிற் கோபங் கொள்ளவில்லை; துன்பத்தில் இன்பங்கண்டாள். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை சிரங்கு நோயினுல் வேதனைப்பட்ட போது துன்பத்தில் இன்பங் கண்டார். செந்நிறப் புண், வெண்ணிறப் புண், வயிரமான புண் எனப் பல்வகைப் பாகச் சிரங்குப்புண்கள் அவருடலை வருத்தின. அப்பொழுது கவிமணி:

'முத்துப் பவளம்
முழுவயிரம் மாணிக்கம்
பத்தியொளி வீசு
பதக்கமெல்லாம் — சித்தன்
சிரங்கப்ப ராயன்
சிறியேன் எனக்குத்
தரங்கண்டு தந்த தனம்'

எனத் தமது தாழ்ந்த நிலைமை நோக்கிச் சிரங்கப்பன் முத்து, பவளம் முதலியவற்றைச் செல்வமாக (தனம்)த்தந்தான் என்ற பொருளில் அழகிய வெண்பாவைப் பாடியுள்ளார்.

வண. ஜி. யூ. போப் என்னும் மேனுட்டறிஞர் எமது திருவாசகத்தில் மிகவும் ஊறினுர். தமது கல்லறையில் 'ஒரு தமிழ் மாணவன்' என்னுஞ் சொற்கள் பொறிக்க வேண்டுமென வேண்டினுர். திருவாசகத் தேன் அவருக்கு மிகவும் இனித்தது. இராமலிங்க சுவாமிகள் திருவாசகத்திற் பரவசப்பட்டுப் பாடிய பாடல் சிறந்த கவிதைக்கு உதாரணமாகத் திகழ்கிறது:

''வான்கலந்த மாணிக்க
வாசக நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து
செழுங்கனித்தீஞ்
சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து
உவட்டாமல் இனிப்பதுவே''

திருவாசகத்தில் ஒருவர் கலந்து பாடும்பொழுது கருப்பஞ்சாறு, தேன், பால் முதலியவற்றின் தீஞ்சுவைகள் ஏற்படுகின்றன என்பதற்கு வேறு உதாரணம் தேவையில்லை.

[ காரைநகர் இளைஞர் சங்கம் திரு. பொ. கந்தசாமிஅவர்களின் தலைமையில் அண்மையிற் கொண்டாடிய பாரதி விழாவில் திரு. ... ஆற்றிய சொற்பொழிவின் சாரம்; ]

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி, 450ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச அச்சி யந்திரசாலையில், 20—9—1974 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பிரதம ஆசிரியர் : திரு. நம. சிவப்பிரகாசம்

ஆசிரியர் : திரு. மூ. மயில்வாகனம்

## இலட்சார்ச்சனை

வண்ணை ஸ்ரீவீரகத்தி விநாயகராலயத்தில் 15-9-74 தொடக்கம் விநாயகப் பெருமானுக்கு இலட்சார்ச்சனை நடைபெற்று, 19-9-74 வியாழக்கிழமை விநாயக சதுர்த்தியன்று பூர்த்தியானது, அன்றிரவு விநாயகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்த பின் சுவாமி வீதிவலம்வரும் காட்சியும் நடைபெற்றது.

ஸ்ரீகற்பக விநாயகர்கோவிலில்

## விநாயகர் சதுர்த்தி

சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலில் 19-9-74 வியாழக்கிழமை மாலை 6 மணி தொடக்கம ஷ உற்சவம் சிறப்பாக நடைபெற்றது. விநாயகாகவற் பாராயணம், கந்தபுராண பாராயணம் விநாயகப்பெருமான் வீதியுலா வருதல் முதலியன நிகழ்ந்த பின் பண்ணிசைப் புலவர் திரு. வே, சிவஞானம் பக்திப் பாடல்கள் ஓதினுர். 'சைவ வீரர்' என்னும் பொருளில் நாச்சிமார்கோவிலடி இராஜன் வில்லிசைக்குழுவினரின் வில்லுப் பாட்டு நிகழ்ச்சியும் நடந்தது.

# நாவலர் பிள்ளைத்தமிழ்

ஆக்கம் : — "பழைய பாணி" —

(முன் வளர்ச்சி — 32)

ஏழாவது :- அம்புலிப் பருவம்.

தேவர்கலை வவ்விடத் தினமொன்றிழந்துழல்
சிறுமையோய் நீயிவன்தான்
தேவர்குறை நேர்ந்துதவு கலைகொண்ட பெருமையோன்
செய்தியீ தகில மறியும்
மூவர்முதல் சிவனைமுன் தூஷித்த தக்கன்மகம்
முகஸ்துதிக் கணைந்தவன் நீ
முன்னுசிவ தூஷகர் முகத்தினும் விழியாத
முதுசீல னெங்கள் பிரான்
பாவிகளொ டும்பயில் பழக்கவாசனையுளையப்
பரிச்சய மிவற்கில்லையே
பார்த்திலனைப் பேதமும் பரிந்தனை யழைத்திட்ட
பான்மை நின் பாக்கியங்காண்
ஆவதென் பேழ்கணித் தாறுமுக ஐயனுட
னம்புலீ யாட வாவே
அழகுதமிழ் தழைபவரு மாசானை மையனுட
னம்புலீ யாட வாவே. 4

குறிப்பு :— தேவர் - பொன்னுச்சாமித்தேவர்.

மறைஞான சம்பந்தர்

## குருபூசை

ஷ குருபூசை சைவ பரிபாலன சபையாதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் 13-9-74 திங்கட்கிழமை யன்று நடைபெற்றது. நடராஜப் பெருமானுக்கு விசேஷ பூசை நிகழ்ந்த பின், மறைஞானசம்பந்தர் புராணம் படித்துப் பயன்சொல்லப்பட்டது; புராண படனத்தில் சைவப் பெரியார் திரு. சி. தம்பையா, திரு. த. சந்திரராசா முதலியோர் பங்குபற்றினர்.

உருத்திர புரத்தில்

## பனை மகோற்சவம்

உருத்திரபுரத்தில் சென்ற 18-9-74 புதன்கிழமை மில்க்வைற் சவர்க்காரத் தொழிலக அதிபர் சிவநெறிப் புரவலர், கற்பகதரு நாயகர் திரு. க. கனகராசா ஜே. பி, அவர்கள் முயற்சியாலும் உதவியாலும் பனை மகோற்சவ விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சில தினங்களுக்குமுன் மழைபெய்து ஈரமாயுள்ள நிலத்தில் ஏராளமாகப் பனம் விதைகளை நாட்டுவதற்கு அவர் ஊக்கமளித்தார். யாழ்ப்பாணத்தில் பணங்கொடுத்துப் பனம் விதைகளை வாங்கிக்கொண்டு சென்று உருத்திரபுரத்தில் எல்லோருக்கும் விநியோகம் செய்தார். அத்தருணம் பனை சோடனம் என்னும் நூலையும் வெளியீடு செய்து அன்பளிப்பாக வழங்கினர்.

உருத்திரபுரத்திலுள்ள காந்தி நிலையத்தில் அகில இலங்கைக் காந்திய சேவா சங்கத் தலைவர் திரு. இ கந்தையா அவர்கள் தலைமையில் நடந்த விழாவில் திரு. சோ. க. வேலாயுதபிள்ளை வரவேற்புரை கூறினுர். அவர் தமது வரவேற்புரையின் போது கிளிநொச்சிப் பகுதியில் பனை நன்ருகப் பயன்தரும் என்றும் கனகராசா அவர்களின் முயற்சி வெற்றி பெறும் என்றும் கூறினுர் வித்தியா பகுதியின் தொழில் முன்னிலைப் பாடப் பகுதியில் விரிவுரையாளராயுள்ள திரு சு. பரநிருபசிங்கம் அவர்கள் பனையைப் பற்றி தமிழ்நாட்டிலும் மேல் நாடுகளிலும செய்த ஆராய்ச்சிப் பேறுகளை விபரமாக எடுத்துக் கூறினுர். பனை மரம் உணவு தருவதோடு. தொழில் வளத்தையும் தருகிறது என்றும் பனம் பண்டங்களின் மருந்துத் தன்மையையும் ஆராய்வோடு எடுத்துக் கூறினுர்கள. பூர்விகமும் தெய்வீகமும் பொருந்திய பனை சமூக நலனுக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் உபயோகப்படுகிறது என்றும் அதனுல் கைத்தொழிலுக்கும் குடிசைத் தொழிலுகமும் மூலப்பொருள்கள் ஏராளமாக உண்டென்றும் அவற்றின் கழிவுப் பொருட்கள் திறமான பசளையாகப் பயன்படுகிறது என்றும் கூறினுர். தமிழ் நாட்டிலிருந்து பனம்பண்டங்கள் ஏராளமாகப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி யாவதையும் அவர்குறிப்பிட்டார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்
இல: 4314

(1) வலலிபுரம் நாகேஸ்வரனும் பெண்
(2) பவளராணியும்
நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி
— வழக்காளிகள்
எதிராக
(1) முத்து இராமலிங்கமும் பெண
(2) செல்லம்மாவும்
நுணுவில் கிழக்கு, சாவகச்சேரி
— எதிராளிகள்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தால் 4314-ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப் பிரகாரம் கீழ்க்காணுமாதனடாப்பில் விபரிககப்படுமாதனம 1974ம் ஸ்ரீ ஐப்பசி மாதம 9ம் திகதி புதன் கிழமை முற்பகல் 10-30 மணியளவில் அககாணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில விற்கப்படும்.)

தீர்வைத்தொகை:
ரூபா 3500/-ம், 2-9-1972 தொடக்கம், தீர்வைத் திகதி 25-1-1973 வரைக்கும் ரூபா 2500/-க்கு 10 வீத வட்டியும் பின் கூட்டிவரும் தொகைக்கு இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 293-70 சதம் (9-10-73 இல் கோட்டில் கட்டடப்பட்ட செலவில் ரூபா 150/-ம் தீர்வைத் தொகையில் ரூபா 1000/-மும் தவிர்க்கப் பட்டுளளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக கோவிற்பற்று நுணுவில் இறை வனவில் வளவும் மறு பிரிவுகளும் நி. பர. $7\frac{3}{4}$ இதில் தெற்குப் பக்கமாக நி பர. (5) ஐந்து பரப்புக்கும் எல்லை கிழககு:- சின்னத்துரை பெண் இராசபூபதியினுதனம், வடக்கு:- இககாணிக்கு போக்குவரவு செய்வதற்காக விடப்பட்ட ஒழுங்கை முகப்பும், முத்து பெண இலட்சுமிக்குரிய மிகுதியாதனமும், மேற்கு:- நடராசா பெண் சின்னுச்சியினுதனம, தெற்கு:- சுப்பிரமணியம் நாகலிங்கத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட காணியடங்கலும கிழககெல்லைக்காணிக்குள்ளிருக்கும கிணற்றில் இதற்குரிய தண்ணீர்ப் பங்கும் வழி வாய்க்கால் பாவிப்புரித்தும்.

எஸ். வி. சதாசிவம்
நீதிமன்ற விற்பனவு ஆணையாளர்
சாவகச்சேரி,
9-9-74 208 20.9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org